செ.வெ.எண்.74 நாள்.12.02.2018

**அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் பொதுத் தேர்விற்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் மார்ச்–18, பொதுத்தேர்வு SSLC, மேல்நிலை வகுப்பிற்கான பதினொன்று மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பிற்கான தேர்வு 01.03.2018 முதல் துவங்கி 06.04.2018 வரையிலும், 07.03.2018 முதல் 16.04.2018 வரையில் +1 வகுப்பிற்கும், இடைநிலைக்கல்வி (SSLC) தேர்வு 16.03.2018 முதல் 20.04.218 வரையில் நடக்க இருக்கும் தேர்விற்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் இன்று (12.02.2018) மாலை 5.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இத்தேர்வில் மேல்நிலைப்பள்ளி , இரண்டாம் ஆண்டு தேர்விற்கு 349 –பள்ளிகளிலிருந்து 119 –தேர்வு மையங்களிலிருந்து 49,973 மாணவர்களும், மேல்நிலைப்பள்ளியில் முதலாம் ஆண்டு தேர்விற்கு 360 பள்ளிகளிலிருந்து 119 தேர்வு மையங்களிலிருந்து 47,300 மாணவர்களும், இடைநிலைத் தேர்விற்கு (SSLC) 610 பள்ளிகளிலிருந்து 157 தேர்வு மையங்களில் 52,895 மாணவர்கள் தேர்வு எழுதவுள்ளனர்.

இம்மாவட்ட தேர்வுகள் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு வருவாய் துறை அலுவலர்கள் சிறப்பு கண்காணிப்புக் குழுவும், காவல் துறையின் மூலம் வினா–விடைத்தாள் சேகரிப்பு மையங்களில் ஆயுதம் ஏந்திய காவல் பாதுகாப்பிற்காகவும், தேர்வு நடைபெறும் நாட்களில் காவலர்களை பாதுகாப்பிற்காக நியமிக்கவும் ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

பொதுத்தேர்வு நடைபெறும் நாட்களில் மின்வெட்டு இன்றி தேர்வு பாதிக்காத வண்ணம் தேர்வு நேரங்களில் தடையின்றி மின்சாரம் வழங்கிட உறுதி செய்யுமாறும் ஆட்சியர் அவர்கள் அறிவுறுத்தினார்.

பொதுத்தேர்வு நடைபெறும் நாட்களில் தேர்வு மையங்களுக்கு மாணவர்கள் சென்று வர கிராம பகுதிகள் மற்றும் பிற பகுதிகளில் பேருந்து வசதியினையும் செய்து தருமாறும், பொதுத்தேர்வு நடைபெறும் நகராட்சிக்குட்பட்ட தேர்வு மையங்களில் மாணவர்களுக்கான சுகாதாரமான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி மற்றும் சுற்றுப்புற தூய்மை போன்ற வசதிகள் தேர்வு வளாகத்தில் இருக்க வேண்டும் என நகராட்சி ஆணையர்கள் உரிய ஆவணம் செய்யுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, சார் ஆட்சியர்கள் திரு.ஜெயசீலன் இ.ஆ.ப., திரு.கிள்ளி சந்திரசேகர் இ.ஆ.ப., உதவி ஆட்சியர்(பயிற்சி) திருமதி.இரத்தினா இ.ஆ.ப., மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.ரெ.திருவளர்செல்வி, கோட்டாட்சியர்கள் திரு.ராஜீ,திரு.ராஜேந்திரன், காவல்துறை துணை கண்காணிப்பு அலுவலர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள், உதவி தொடக்க கல்வி அலுவலர்கள், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர், அரசு போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர், நகராட்சி ஆணையர், செயற்பொறியாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

காஞ்சிபுரம்.

அரசுத் தேர்வுத் துறையால் நடத்தப்படும் பொதுத் தேர்விற்கான ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.நூர்முகமது, சார் ஆட்சியர்கள் திரு.ஜெயசீலன் இ.ஆ.ப., திரு.கிள்ளி சந்திரசேகர் இ.ஆ.ப., உதவி ஆட்சியர்(பயிற்சி) திருமதி.இரத்தினா இ.ஆ.ப., மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.ரெ.திருவளர்செல்வி, கோட்டாட்சியர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.